1979 மார்ச் 21]

திரு து. இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, விசைத் தறிகளைப் பொறுத்தவரை இதில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் கொத்தடிமைகளைப் போல் நடத்தப்படுகின்றார்கள். அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம், போனஸ் போன்ற வசதிகள், மற்றத் தொழிற்சாலைகளில் வழங்கப்பட்டு வரும் மருத்துவ வசதிகள், நிர்ணயிக்கப்பட்ட வொர்க் லோடு போன்றவைகளை நிர்ணயிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம்: இவைகளைப்பற்றி தொழிற்சங்கங்கள் அந்தந்த தொழில் நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி வெற்றி பெறுவார்கள் என்று நம்புகிறேன். மேலும் இவைபற்றி தொழில் தகராறு எழுப்பினால் அரசு அதற்கு ஆவன செய்யும்.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, போனஸ் பற்றியெல்லாம் சம்பந்தப்பட்ட முதலாளிகளிடம் பேச்சு வார்த்தை நடத்திக்கொள்ளவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படிப்பட்ட விசைத்தறி தொழிலாளர்களுக்கும் போனஸ் கொடுக்கவேண்டும் என்று சட்டத்தைத் திருத்துவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கம் சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: இதைப்பற்றி இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பே பதில் சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இப்போது கூறியதையும் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிங்காநல்லூர் இ. எஸ். ஐ. மருத்துவ மனை.

*வினா எண். 491—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை சிங்காநல்லூர் இ. எஸ். ஐ. மருத்துவ மனையின் அட்வைசரி கமிட்டியை மாற்றியமைத்து செயல்பட வைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) இப்பொழுது உள்ள குழுவில் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரை அங்கத்தினராக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

[1979 மார்ச் 21

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) அட்வைசரி குழுவை மாற்றி அமைக்கும் செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

(ஆ) அக்குழுவில், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரை அங்கத்தினராக்க விதிகள் ஏதுமில்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, தற்சமயம் இந்த இ. எஸ். ஐ. அட்வைசரி கமிட்டியில் அங்கம் வகிப்பவர்கள் யார் யார்? அந்தக் கமிட்டியில் அங்கம் வகிப்பதற்குத் தகுதியுடைய அடிப்படைகள் என்ன ? அந்த அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதில் அங்கம் வகிப்பதற்கு தகுதியில்லை என்று சொன்னால் அதற்கு மேல் தகுதியுள்ளவர்கள் யாராவது இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Thiru S. RAGHAVANANDAM : The presnet term of office of the Committee expired on 12-6-1975. You are in a hurry. Translation will also follow. அவசரப்படாதீர்கள்—மொழி பெயர்ப்பும் சொல்லுகிறேன், 1975-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12-ம் நாளோடு இந்தக் கமிட்டியின் காலம் முடிந்துவிட்டது. இதை ரீகான்ஸ்ட்டியூட் செய்யவேண்டுமென்றால் ஒரு லோக்கல் கமிட்டி ஃபார்ம் செய்ய வேண்டும். அதற்குப் பின்னால்தான் அட்வைசரி கமிட்டி போட வேண்டும், எம். எல். ஏ-க்களைப் போடுவதற்கு இப்பொது சட்டம் இல்லை. டெல்லியில் தான் இ. எஸ். ஐ. நிறுவனத்தின் தலைமைக் கழகம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அட்வைசரி கமிட்டியில் எம். எல். ஏ-க்கள் இடம் பெற வேண்டும் என்று அரசுக்கு விண்ணப்பம் எழுதிக் கொடுத்தால் அதை டெல்லிக்கு அனுப்புவதற்கு இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, இந்த கோவை, சிங்காநல்லூர் இ. எஸ். ஐ. மருத்துவ மனையில் ஏற்கனவே தொழிற் சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழு இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அப்படியென்றால் அந்தத் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் யார் யார் என்பதையும், இனிமேல் அந்தக் குழுவில் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் சேர்க்கப்படவில்லை என்றால் அவர்கள் சேர்க்கப்படுவார்களா என்பதையும் , அத்துடன் சட்ட மன்ற உறுப்பினர்களும் அந்தக் குழுவில் இடம் பெற செய்யப்படுமா ன்பதையும் கேட்க விரும்புகிறேன்.

1979 மார்ச் 21]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஏற்கனவே நான் சொன்னது போல், இந்தக் குழுவில் சட்டமன்ற உறுப்பினா களுக்கு இடம் கொடுக்கவேண்டும் என்று சட்டத்தில் இடம் இல்லை. இப்போது மீண்டும் இந்தக் கமிட்டியை ரீகான்ஸ்ட்டியூட் செய்ய வேண்டும். அதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய செண்டிமென்ட்—உணர்வுகளை அரசு எடுத்துக் கொள்ளும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர் களே, இந்த அட்வைசரி கமிட்டியில் நியமிக்கப்படக்கூடிய உறுப் பினர்களின் தகுதியின் அளவுகோல் என்ன ? எந்த அடிப் படையில் அது நிர்ணயிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

[முற்பகல் 9—10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வர் அவர்களே, அதைப் பற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண். 492 (திரு மு. அம்பிகாபதி குறுக்கிடல்) இக் கேள்வி , கோவை சிங்காநல்லூர் பற்றியது. மன்னார்குடி பற்றியது அல்ல.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, இது ஜெனரல் பாலிசியைக் பற்றியது. மிகவும் முக்கியமான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. இது சிங்காநல்லூர் மருத்துவ மனையைப் பற்றியது. இதிலே பாலிசி வராது. நீங்கள் மன்னார்குடி, எனவே, உட்காருங்கள்.

இராஜகம்பீரத்திற்கு குடிநீர் வழங்கல்

*வினா எண். 492—திரு. வ. மு. சுப்பிரமணியன் :—மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரைத் தொகுதி, இராஜகம்பீரத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தால், குடிநீர் திட்டம் ஒன்று நிறை வேற்றுவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா ?